ஞானபாநு.

VOL 3. தொகுதி 3. | December 1915. ராக்ஷஸ ௵ மார்கழி ௴ | No 9. பகுதி 9.

ஸ்ரீ விவேகாநந்தர் விஜயம்.

அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அந்நிய நாடுகளிலும் சென்று நமது ஆரிய ஸநாதனமதத்தின் பெருமையை ஸ்தாபித்து என்றுமழியாப்புகழுடன் இந்தியாவுக்குத் திரும்பிவந்த ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் பெயரை எல்லோரும் கேட்டிருப்பர். 1863-ம் வருஷத்தில் இவர் கல்கத்தாவில் பிறந்தார். இவர் கல்லூரி (காலேஜ்)யில் உயர் வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்தபொழுது பிரஹ்ம சமாஜம் என்னும் சபையில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து அவர்களுடைய கொள்கைகளை யநுசரித்துக்கொண்டு வந்தார். இப்படியிருக்கும்பொழுது கல்கத்தா நகரின் அருகாமையிலுள்ள தக்ஷிணேஸ்வரம் என்னும் கிராமத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரஹம்ஸர் என்ற பெயருடன் ஒரு மகான் தனவந்தர், தரித்திரர், பெரியோர், சிறியோர், படித்தவர், படியாதவர் எல்லோருடைய கவனத்தையும் இரும்பை யிழுக்கும் காந்தம்போல இழுத்துவந்தார். இவருடைய அமிருத வசனங்கள் அநேகரைப் பரிசுத்தமாக்கி விட்டன. இவருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. ஆயினும் இவருடைய இன்பமொழிகளைக் கேட்பதற்கு தினந்தோறும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் - ஆங்கிலக் கல்வியில் கரைகண்டு ஆணவம்மிகுந்திருந்த ஜனங்கள் கூட - இவரிடத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். இப்படி வந்துகொண்டிருந்தவர்களில் ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளுடைய அம்மான் ராமச்சந்திர தத்தர் என்பவரும் ஒருவர். இவர் ஒருநாள் ஸ்ரீ விவேகாநந்தரையும் கூட்டிக்கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண பரஹம்ஸரிடத்திற்குப் போனார். குருவும் சிஷ்யனும் சந்தித்துக்கொண்டார்கள். அன்பெனும் பாசம் ஒருவரோடொருவரைக் கட்டிப்பிணைத்தது. முதல் முதல் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஸ்ரீ விவேகாநந்தரைக் கண்டவுடன் தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களைநோக்கி விவேகாநந்தரைச் சுட்டிக்

காட்டிக்கொண்டே இதோ வருகிறவன் ஒருகாலத்தில் உலகத்தை யாட்டியசைப்பான் என்று கூறினாராம். இவருடைய இவ்வாக்கு உண்மையாயிற்று.

* * *

ஸ்ரீ விவேகாநந்தரின் பூர்வாசிரமப்பெயர் நரேந்திரநாத தத்தர்; குருவினால் விவேகாநந்தரென்று நாமகரணம் செய்யப்பெற்றார். இவர் கையினால் காசைத்தொடுவதில்லையென்றும் ஒருவரிடத்திலும் ஆகாரம் கேட்பதில்லையென்றும் இரண்டு கடோமான விரதங்கள் வைத்துக்கொண்டு கால்நடையாகப் பத்து வருஷ காலம் இந்தியா தேசம் முழுதும் சுற்றினது மல்லாமல், ஹிமாசலப் பிரதேசங்களிலும் திபேத், சீன முதலிய நாடுகளிலும் சஞ்சரித்தார். கடைசியாக இவர் சென்னை வந்து சேர்ந்து தம்மைக் கண்டு பிடித்துக்கொண்ட அநேகருக்கு உபதேசமொழிகள் உரைத்துக்கொண்டிருந்த காலத்தில், அமெரிக்காதேசத்தில் சிகாகோமாநகரில் சர்வமத மகாசபை யொன்று எற்பாடு செய்யப்படவே, காலஞ்சென்ற ராமநாதபுரம் ராஜா அவர்கள், மைசூர் மகாராஜா அவர்கள், இப்பொழுது உபகாரச்சம்பளம் பெற்றுச் சுககாலக்ஷேபம் செய்துவரும் நீதிபதிப ஸ்ரீ சுப்பிரமணியய்யாவர்கள் முதலிய பிரமுகர்கள் எல்லாரும் அமெரிக்காவில் சர்வமத மகாசபையில் ஹிந்து மதத்தை யெடுத்துக் கூறுவதற்குப் பிரதிநிதியாகச் செல்லவேண்டுமென்று ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளைக் கேட்டுக்கொள்ளவே, அவரும் இசைந்தார். சென்றார் அமெரிக்காவுக்கு; ஹிந்துமத ஜயகோஷம் புரிந்தார். ஹிந்துமதத்தின் பெருமையையும் அருமையையும் எல்லோரும் எளிதில் உணர்ந்துகொள்ளுமாறு எடுத்துரைத்தார். இவருடைய வேதாந்த ஞானகர்ச்சனையைக் கேட்ட ஜடவுலகமானது கிடுகிடு என்று நடுங்க ஆரம்பித்தது.

* * *

பூர்விககாலத்து மகரிஷிகளுடன் இவரை நாம் ஒப்பிடுகின்றோம். மகரிஷிகள் காலதேசாதிகளை யநுசரித்து உபதேசித்து வந்தார்கள். இவருடைய பிரசங்கங்களையும் எழுத்துக்களையும் கடிதங்களையும் சிறிது ஆழ்ந்து கவனித்தால் இவரும் காலதேசாதிகட்குத் தக்கவாறு உபதேசித்தார் என்பது நன்கு புலப்படும். அமெரிக்கா தேசமானது பிரபஞ்ச ஞானத்திலும் தனத்

திலும் நாகரீகத்திலும் உன்னத நிலையை யடைந்து மாயையினால் கொழுத்து புத்தி மயக்கி ஜடவெறி பிடித்திருந்தது. அப்பொழுது அந்த தேசத்திற்குவேண்டியது அத்வைத ஞானந்தான். மதோபதேசமே அமெரிக்கர்களுடைய மனத்தைத் தெளிவிப்பதற்கு அவசியமா யிருந்தது. அவர்களுக்கு வேண்டியதை அவர்களுக்குக் கொடுத்தார். மேனாடுகளில் இவர் சஞ்சரித்தபொழுது இவர் செய்த பிரசங்கங்களெல்லாம் வேதாந்த விஷயத்தைப்பற்றியே யிருந்தன. ஜனசமுதாய நியாயங்கள், தேசாபிமான நீதிகள் முதலியவற்றைப்பற்றி இவர் அங்கு ஒருவார்த்தைகூடப் பேசவில்லை. ஆனால் இந்தியாவுக்கு வந்தவுடன் இந்திய ஜன சமுகத்திற்கு ஊக்கத்தையும் உயிரையும் அளிக்கவேண்டுமென்ற கருத்துடன் தேசாபிமானப் பிரசங்கங்கள் செய்தார். ஆத்ம ஞானமானது இந்திய ஜாதியாருக்கு இயற்கையாகவே யுள்ளது. ஆனால் பொறாமை, சோம்பல் முதலிய துர்க்குணங்கள் இந்திய ஜாதியில் விருத்தியாகி, இயற்கையாயுள்ள ஆத்மஞானத்தை மறைத்துவிட்டன. இக்குறையைக் கண்டார் ஸ்ரீவிவேகாநந்தர். இவர் நமது நாட்டில் செய்த பிரசங்கங்களிலும் இந்திய நண்பர்களுக்கு இவர் எழுதிய கடிதங்களிலும் பெரும்பான்மையாக இவர் தேசாபிமானத்தை யூட்டுவதிலும் நமது முன்னோர்களின் பெருமையை நமக்கு எடுத்துக்கூறி நமக்குள்ளிருக்கும் ஆர்வத்தைக் கிளப்பிவிடுவதிலுமே கண்ணுங் கருத்துமா யிருந்தார்.

* * *

ஆ! ஆ! அவருக்கு நமது தாய்நாட்டின்மீது இருந்த அன்புதான் என்னே! அவருடைய தேசாபிமானத்தில் ஆயிரத்தில் ஓர் அளவு நமக்கு இருந்தால், நமது தேசம் க்ஷேமம் அடைந்து விடுமே. ஸ்வாமிகள் இப்புண்ணிய பூமியைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—

"இத்தாரணியில் தெய்வானுக்கிரகம் பெற்ற புண்ணிய பூமி தானேயென்று உரிமைபாராட்டக் கூடியதேசமும் இப்பூதலத்திலுள்ள சர்வ ஆத்மாக்களும் தத்தம் கர்மபலத்தை அநுபவிக்கும் பொருட்டு ஜன்மமெடுத்தற்குரிய தேசமும் ஈஸ்வராபிமுகமாய்ப் பிரவர்த்தித்துள்ள ஒவ்வொரு ஆத்மாவும் தானடைய விரும்பும் மோக்ஷபதவியைச் சாதிப்பதற்கு வந்தடையவேண்டிய பூமியும், பரிபூரண சாந்தம், கருணை, பரிசுத்தம், அடக்கம் என்பனவற்

தில் மேன்மை வகித்து விளங்கும் மாநாட மண்டலத்தையுடைய தேசமும் இவையனைத்திற்கும் மேலாக அந்தர்முக ஆத்மதர்சனமும் சமயபக்தியுமுடைய தேசம் ஒன்றிருக்குமாயின், அது பாரத வருஷமேயன்றி வேறன்று. ஆகையாலன்றோ, வெகு பூர்வகாலம் தொடங்கிச் சமயஸ்தா பகாசார்யர்கள் அவ்விடத்தினின்றும் எழுந்து சமயஞான தத்துவமென்னும் வற்றாத நன்னீர் நதிப்பெருக்கால் பூமிமுழுவதையும் அடிக்கடி நீராட்டினார்கள்? அங்கிருந்தன்றோ பூமியின் எத்திசைகளிலும் தத்துவ சாஸ்திர அலைகள் புரண்டு பரப்பனவாயின? தற்காலத்து உலகத்தில் பாவிக்கலந்து கிடக்கும் லோகாயத நாகரிக விருத்தியை நிவிருத்திசெய்து அதன் ஸ்தானத்தில் மெய்ஞ்ஞான நிலையை நாட்டப்போகும் தத்துவசாஸ்திர அலைகள் இன்னும் அங்கிருந்து தானே புரளப்போகின்றன? இதரதேசங்களிலேயுள்ள கோடானுகோடி ஜீவர்களின் இருதய கோசங்களைத் தஹித்துவரும் லோகாயத விருத்தி யென்னும் அவியாது கொழுந்து விட்டெரியும் அக்கினிஜ்வாலையைத் தணிக்கவல்ல ஜீவாமிருத ஞான தடாகம் இப்புண்ணியபூமியின்கண் தான் இருக்கின்றது." "இந்தியாவோ எப்பொழுதும் தன் நிலைதவறாமல் பல்லாயிரமாண்டுகளாக இருந்துவருகின்றது. கிரீஸ் (Greece) தேசம் இன்னும் ஏற்படாத காலத்தும், ரோமாபுரி யென்கிற பெயர்கூட நினைக்கப்படாத காலத்தும் தற்காலத்திய ஐரோப்பியரின் முன்னோர்கள் நீலவர்ணம் பூசி அடர்ந்த ஜர்மனிக்காடுகளிலே பசுப்பிராயமாய்ச் சஞ்சரித்த பூர்வ காலத்திலும், எமது தேசத்திலே உத்தம பிரவிருத்தி யுண்டாயிருந்தது. இன்னும் உலக சரித்திரத்துக்கு அதீதமானதும் கர்ண பாரம்பரியமும் எட்டிப்பார்க்கத் துணியாது தியங்கும்படி கிடப்பதுமான அப்பூர்வகாலம் தொட்டு இந்த க்ஷணம்வரையிலும் நம்தேசத்திலிருந்து எத்தனையோ கொள்கைகள் ஒன்றின்பின் ஒன்றாய் உண்டாகி வெளிக்கிளம்புவன வாயின." "எமது புண்ணியம் வாய்ந்த தாய் நாடு சமயநெறிக்கும் தத்துவஞானத்துக்கும் தாயகம்; பிரஹ்மாநுபூதிச் செல்வர்களின் பிறப்பகம்; வைராக்கியத்துக்குக் குலவீடு. தொன்றுதொட்டு இற்றைநாள்வரை உத்தம புருஷார்த்தம் விளங்கித் தழைத்துவரும் நாடு இதுவேயன்றி வேறெதுவுமன்று." "ஞானம் பிற நாடுகளில் வியாபிப்பதற்கு முன் அதற்கு உறைவிடமா யிருந்தது இத்தேசமே. இவ்விந்தியாவில் கடல்போன்ற நதிகள் ஓடுவது இந்நாட்டில் உதிக்கும் ஆத்ம

ஞானத்தைக் குறிப்பிடுவதுபோ லிருக்கின்றது. இங்கன்றோ ஹிமாசலம் எப்பொழுதும் பனியால் மூடப்பட்டதாகி விண்ணுலகத்து ரகஸ்யத்தை யளாவுகின்றது? இத்தேசத்திலன்றோ ஞானிகளிற் சிறந்தவர் வாழ்ந்தனர்? இங்கன்றோ மனிதன் எத்தகையவன், பிரபஞ்சம் எத்தகையது, என்ற விசாரங்கள் முதல் முதல் நிகழ்ந்தன? ஆத்மா நாசமற்றது, நியந்தாவாகிய கடவுள் ஒருவருளர், ஜகத்திலும் ஜீவனிலும் நிறைந்த கடவுள் அவரேயென்ற சித்தாந்தங்கள் இங்குத் தானே முதன் முதலிற் செய்யப்பட்டன? மதமும் தத்துவ விசாரமும் எட்டக்கூடிய தூரம்வரை எட்டினமை இங்குத்தானே? இத்தேசத்திலிருந்தன்றோ தத்துவ ஞானம் கடலினின்றும் எழும் அலைகளைப்போல அந்நிய தேசங்களுக்குப் பரவிற்று? இனிமேலும் இங்கிருந்து தான் மேற்கூறிய ஞானமானது தற்காலத்தில் மெலிந்து கிடக்கும் தேசங்களுக்குச் சென்று அத்தேசத்தவருக்கு வலிமையூட்ட வேண்டும். அநேக வருஷங்களாய் அந்நியராஜாக்களால் எதிர்க்கப்பட்டும், பற்பல ஆசாரங்களும் ஒழுக்கங்களும் இடையிடையிற் கிளம்பியும் இவைகளாற் சலியாமற் பர்வதம்போல் நாசமற்ற ஜீவத்துவம் பொருந்திய அந்த பாரதவர்ஷமன்றோ இது? சிலையைக்காட்டிலும் ஸ்திரமானதாய் அழியாத வீரியமுள்ளதாய் நாசமற்ற வாழ்வுபெற்றிருக்கும் நாடு இதுதானே? எவ்வாறு நாம் ஆத்மா ஆதியந்தமற்றது என்று சொல்லுகிறோமோ, அப்படிப்பட்ட ஆதியந்த ரஹிதமும் அமிருத சொரூபமானது மன்றோ இத்தேசத்தின் நிலையும்? அப்படிப்பட்ட தேசத்தின் பிள்ளைகளல்லவோ நாம்?"

ஸ்ரீ விவேகாநந்தருடைய, மேற்கூறிய வசனங்களை நாம் படிக்கும் பொழுது நமக்குள் என்றுமில்லாத ஒரு உற்சாக முண்டாகின்றதல்லவா? தேசபக்தியில்லாதான், அதுவும் நமது பாரத மாதாவினிடத்துப் பக்திசெலுத்தாதவன் உயிரிருந்தும் செத்த பிணமேயாவன்; அவன் பலகற்றும் முழுமுடனுவன். பாரதபூமியில் பிறக்கும் பாக்கியம் பெற்றும் அதனிடத்து அன்புசெலுத்தாதவனை மானிடவர்க்கத்திற் சேர்ந்தவனென்று கூறுதல் தகாது.

தமிழின் சிறப்பு.

பிரஹ்மஸ்ரீ ல. சு. சுப்பராய அய்யரவர்கள் எழுதியது.

1. நாம்பேசுவது முற்றும் தமிழே. ஆயினும், தனித்தமிழ் என்பதன்கருத்து எத்தகைத்து என்பது ஆராய்வோர்க் கன்றி மற்றோர்க்கு, இன்னதென்றும் புலனாவதருமை. அன்றியும், தனித்தமிழின்கண் தேர்ச்சி பெற்ற சிற்சில கல்விமான்களும் தனித்தமிழ்வழங்குவது அருமையெனக் கொள்கிறார்கள். மேலும், 'தமிழின் சிறப்பு' என்பது சொற்களால் அளவுகடந்த ஓர் விரிவானபொருள். தமிழின் கண் உள்ள அருமையும் பெருமையுமான நூல்களினூடே புகுந்து, ஆய்ந்துதெளிந்தோர்க் கன்றி அதைப்பற்றித் தெளிவாயும் விரிவாயும் எடுத்துரைத்தல் கூடாதது. ஏனெனின், பிறர்க்கு, மடம் அறியாமை முதலானவைகளின்மேலீட்டாலும், ஐயம் திரிபு இவைகளின் அச்சத்தாலும் எதைக் கூறவும் நாவெழக்கூசுவதாலேயாம். இவ்வாறிருக்க, தொன்னூலும் பின்னூலுமான எந்நூலுமறியாதயான், தனித் தமிழ்ச்சொற்றொடராக்கத்தில் கலைபிட்டது, இருகட்குருடன் ஒருவன், வனப்பே ஆக்கமாயுள்ள ஓர் பொருளின்தன்மைகளை விளக்கக்கருதுவான் போலவும், வரம்பிலாக் கடலைக்கையால் நீந் திக்கடக்கக் கருதுவான்போலவும், இகழ்ச்சிக்கிடமாயிருக்கிறது எனினும், தமிழ் மகளுக்கு மகனாய்ப்பிறந்தமையின், அன்னையின் பால் கடமையைச்செய்யும் பொருட்டுத் தெரிந்தவரையில் சொல்வதே தகுதியெனக்கருதி முன்வரத்துணிந்தேன். உள்ளன்போடும் உண்மையோடும் முயற்சி செய்வதில் கடமையைச் செலுத்துவதன் நோக்கமாகவே முயற்சித்தும், தகுந்த ஆற்றலின்மையால் ஒருவேளை தவறின், தமிழன்னை உண்மையை மறுத்துத் தள்ளி விடுவளோ? தண்டமிழ்ச் செல்வர்களாகிய மூதறிவுபெற்ற என்னுடன் பிறந்தார், நொய்யனென்று தள்ளிவிடாமல் என்னை ஏற்றுக்கொண்டு தம்பி எனப்பாராட்டுவரோ?

2. தமிழுக்கே சிறப்பெழுத்துக்களான ழ, ற, ன, என்னும் எழுத்துக்கள்வரும் எந்தமொழியும் பெரும்பாலும் கண்டவளவிலேயே தமிழ்மொழி யென அறியப்படல் கூடும். அன்றியும், அதுபோலவடமொழிக்கே சிறப்பாயுள்ள எழுத்துக்கள் வரப் பெற்றவைகளை வடமொழிச் சொற்களென்றும் தெளிவாய் உண

ரலும் கூடும். ஆனால், இவ்விருமொழிகளுக்கும் பொதுவாயுள்ள எழுத்துக்களாலேயே ஆக்கப்பட்ட மொழிகள் எச்சொல்லுக்குரித்தானவை எனக்கண்டவுடனே அறியப்போதுமான வரம்பு ஏற்படாமலிருக்கிறது. அத்தகைய மொழிகளைப்பகுத்துத் தெரிந்தெடுக்க, அவைகளின் ஆக்கம், வழக்கம் ஆகிய பலவகை ஆராய்ச்சிகள் இன்றியமையாதன. மேலும் எண்ணிறந்தவடமொழிச்சொற்கள் தமிழில் திரிந்து இயல்பானதமிழேபோல் நிற்கின்றன. [புத்தகம் முதலானவையேயன்றி, அற்பம், சொற்பம்.] இவைபோல்வனவும் மற்றும்பலவுமுள. அன்றியும் காட்சி, மீட்சி, மாட்சி முதலியவை, அவைபோல் திரிந்துள்ள பலவடமொழிச்சொற்கள் என ஏமாறவும் இடமிருக்கிறது மேலும் தொன்றுதொட்ட பழக்கத்தால் வழக்கப்பட்டமையால் இவ்விருவினச்சொற்களுக்கும் வேற்றுமைதோன்றாமையும் இயல்பேயாகும். ஆனால், இவ்விருமொழிகளையும் கசடறக்கற்று ஆய்ந்து தெளிந்தோர்க்கு இது முற்றும் எளிதே. எனினும், நூல்களின் பெயர்கள், ஆக்கியோர்பெயர்கள், இடங்களின்பெயர்களாகிய பலசொற்கள் வடமொழியிலிருத்தலால் அவைகளைத் தமிழ்ப்படுத்துவது இயல்புக்கும்மாறு, பிறர் பொருள் கொள்வதும் அரிது. ஆகவே அவைகளை இயல்பாகவைத்தலே தகுதியாயிருக்கிறது. அத்தகைய மொழிகளையும் மேற்கோளாகவே சிற்சில விடங்களில் மட்டும் வழக்கியும், கூடுமானவிடத்து புல்லறிவுக்கெட்டியவரை, வேறேதேனும் சொற்களாய்த் தமிழில்காட்டவும் முயன்றுளேன்.

3. தமிழின் சிறப்பைப்பற்றிச் சொல்லுங்கால், அதன்பிறப்பும் அருமையும் சொல்லப்படுவது இன்றியமையாதது. 'தமிழ்' என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்றுபொருள்; அதாவது தமிழ் எனின் இனிமையானசொல் எனப்பெறப்பட்டது. அதைத் 'தடவலின் மிளிர் யாழ்' எனினும் 'தகைவின் (நகவின்) மிக்கோர் மகிழ்' எனினும் மிகையிலாது பொருந்தும். இறைவன் இவைகளினின்றுந்தான் தொகுத்து, 'தமிழ்' என அச்சொல்லுக்குப் பெயரிட்டனரோ! இதுபடைப்புத்தொடங்கினவுடனேயே தென்னாட்டில் இறைவனால் அருளப்பட்டு, அநேகநாளில் வடபுறத்தில் உண்டாயிருந்த வடசொல்லுக்கு எதிராயிருந்தமையின் இதற்குத் தென்சொல் என்றும்பேருண்டு. இறைவனால் அருளப்பட்டதன்றி, அவரால் ஆங்காங்குப் பிறப்பிக்கப்படும் மாட்சிபெற்ற

புலவர்களால் தமிழ் வளர்க்கப்படுவதாயும் ஏற்படுகிறது. இதற் கறிகுறியாக, ஒவ்வொரு ஊழிதோறும் கல்வித்திறத்தால்மாண் டோராகிய பலபுலவர்கள் இதற்கென்றே பிறந்து தமிழைச் சீர் திருத்திபிருப்பதாய் கூறப்பட்டிருப்பதும், பொதியமலைப்பெரு மான் 'அகத்தியர்), காஞ்சிப்புராணத்தை அதேநோக்கமாய்ச் சீர்திருத்திபிருப்பதாய்க் கொள்வதும் சிலநூல்களில்காணலாம், அன்றியும், தொல்காப்பியத்தின் உரைசெய்யுங்கால், நச்சினார்க் கினியர், அந்நூல் முதலூழியின் கடைசியில் செய்யப்பட்டதா யும், அதற்குப்பிறகு வேதவியாசர் "சின்னாட் பல்பிணிச் சிற் றறிவினோர்க்கு" மறைகளை நான்கு கூறாக வகுத்தாரென்றும், அவ்வளவு தொன்மையானதால் அந்நூற்கு அப்பெயர்வந்ததென வும் கூறுவதாலும், வேறுநூல்களைப்பார்க்கினும், தமிழின் தொன் மைதெள்ளிதின் விளங்கும்; கீழ்வருவனவற்றினின்றும் தெரியும்.

4. இறைவனால் என்ஞான்றும் விரும்பி ஓம்பப்பட்டது தமிழ் என்பதற்கு அறிகுறியாக 'இறையனாரகப் பொருள்', என் னும் ஓர்தமிழ்நூல் முக்கணாராலேயே அருளப்பட்டுளது. அதில் தமிழின்விவரங்களும் தலை இடைகடையாகிய மூன்று தமிழ்ச் சங்கங்களைப்பற்றியும் கூறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படு கிறது. "கொங்குதோர்வாழ்க்கை" "மதிமலிபுரிசை" எனத் தலைப்பிட்ட பலபாடல்களும் இறைவனால் பாடப்பட்டுள்ளன. அன்றியும் எவ்வளவோ திருவிளையாடல்களும் அருஞ்செயல் களும் அவரால் நிகழ்த்தப்பட்டுமுள. அப்பர், சம்பந்தர், சுந்த ரர், மாணிக்கவாசகர் முதலான அடியார்களாலும் வியக்கத்தக்க வேலைகள் தமிழ்ச்செய்யுள்களால் நிகழ்த்தப்பட்டனவென்பது தொன்னூலாய்வோர் எவர்க்கும் தெரிந்ததே. பெரிய புராணம் திருவிளையாடற் புராணம். "தாராரு மூவேந்தர் பயிலுந்தொல் லைத் *தமிழ் நாட்டப்புறத்திறைவன் சரணஞ்சார்ந்த சீராரும் தொண்டர்களும்" என "அப்பாலுமடிசேர்ந்தா"ரைப்பற்றி கூறப் பட்டிருப்பதால், இறைவன் தமிழ் மக்களுக்கே ஓர்தனி உயர்வு கொடுத்துத் தமிழ்ப்பாக்களுக்காக வீடளிப்பதாயு மெண்ணவிட மிருக்கிறது.

5. தென்னாடு மற்றெதையும் விடமிகச் சிறப்புற்றதாகக் கொள்ளப்படுகிறது. ஊழியின்கண், நீர்ப்பெருக்கால்அழிக்கப்படா

து. தனித்துநின்றதோணி புரமும் முக்கணனார்ச் சென்றுள்ள எண்ணிறந்த திருக்கோவில்களும் தென்னாட்டின்கண்ணேயுள்ளன. அவை, முக்கணனார் அவ்வவ்விடங்களில் தங்கியருளினார் எனக்குறித்தலானும். குறுங்கடவுள் வாழ்ந்தபொதியமலை தென்னாட்டின் கண்ணிருத்தலானும், அக்கடவுளரால் ஆக்கப்பட்டதும் வழங்கப்பட்டதுமான சொல் தமிழாதலானும், இத்தன்மைய சிறப்பு அச்சொல்லுக்கேயுரித்து. தென்னாட்டின் தமிழ்க்கூட்டத்தாரையும் அவர்களின் சிறப்பையும் பற்றி, பின்கீழே கூறுவோம்.

"விடையுகைத்தவன் பாணினிக்கிலக்கண மேனாள்
வடமொழிக்குரைத்தாங் கியல்மலய மாமுனிக்குக்
திடமுறுத்தியம் மொழிக் கெதிர் ஆக்கியதென்சொல்
மடமகட்கரங்கென்பது வழுதிநாடன்றோ."

[திருவிளையாடற் புராணம்.]

6. தமிழ்மறையெனச் சிறப்புறும் தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், குறள் முதலிய நூல்கள் தமிழிலுள. தமிழிலில்லாத வேறு நூல்களுமில்லையென்றே சொல்லலாம்; பல்வகையான கணக்குத் தொகுதிகளும், உயிர் நூல்களும், நூலியாப்பு, செய்யுள்யாப்பு அணி முதலிய நூலழகுகளையும், சொற்சுவை பொருட் சுவைகளையும் பொருத்தப்பெற்ற பல்லாயிர இயற்றமிழ், இசைத்தமிழ் ஆக்கங்களும், அவைகளின் பல்வேறு தொகுதிகளும்; நெடுங்கணக்கு வரிசைச்சொற்றொகுதிகளும், பல்வேறு சொற்றொகுதிகளும்; அறம்பொருள் இன்பம்வீடு ஆகிய நாற்பயன்களையும் தெளிவாய் விளக்கி அதற்கென்று கருதப்பட்ட நூற்பயனைத்தரும் எண்ணிறந்தவெவ்வேறு நூல்களும், பொழுது போக்குவான் பொருட்டு படிப்போரும் நடிப்போரும் இன்புற்று மகிழ்வதற்கென்றே இயற்றப்பட்டுள்ள இனிமையான தண்டமிழ்ப்பாக்களும் இயற்றமிழ் நூல்களும், எழுத்துக்களினுடையவும் பிறப்பும் ஆக்கமும், சொற்றொடராக்கமும் முறைப்படி அமைக்கப்படுமாறு வரையறுப்புக் கூறி விளக்கும் நன்னூல்முதலிய பன்னூல்களும் இவைகளின் முதனூல்களும், சார்பு நூல்களும், மற்றும் எத்திறத்ததும் எவர் நாடுவதுமான எந்நூல்களும் தமிழின்கண்ணேயுள்ளன.

7. தமிழிலுள்ள இசைத்தமிழ் நூல்களை நோக்கின் அவைகளுக்கு வரம்பேகிடையாதெனலாம். அகவல், வெண்பா, கலிப்பா, கலித்துறை முதலானபலவகைப்பாக்களும், அவை ஒவ்வொன்றிலுமுள்ள பல உட்பிரிவுகளும், இரண்டு அடிகள் முதல் பெருஞ்செய்யுள்வரையுள்ள அளவிலும் தன்மையிலும் பலபான்மையுடையனவாய், அளவிறந்தன. இவைகளில் பலவற்றுக்கு இரண்டு மூன்று பான்மையில் வெவ்வேறு பொருத்தமான பொருள்கள் பொருந்தியிருப்பதும்; சொற்றொடர் நிலைச்செய்யுள் (அருணகிரி அந்தாதி, சரசுவதி யந்தாதி) முதலியனவும் சீர், தளை, அடி, முதலியவைகளால் சொல்நயம், பொருள் நயம் பெறபல அணிகளை உடைத்தான கம்பராமாயணம், நைடதம், அரிச்சந்திர புராணம் முதலியவேறு பெரியநூல்களும், அவைகளின் மாட்சிமையுள்ள செயல்களும் தமிழின்கண்ணேயுள. நிரனிறை, மொழிமாற்றுப்பொருள்கோள், முதலான அணிகளும் மற்றும் பிறசொற்களிற்காணும் எவ்வகையான வேறு அணிகளும் தமிழுக்குச் செய்யும் அழகை நாவால் நவிலமுடியுமோ? பெண்மகளாகிய ஔவை, தமிழில் சிறப்புற்ற செய்யுள்கள் செய்தும், அவற்றால் மக்களுக்குப் பலவிகையான ஒழுக்கம், நெறி, கல்விமுதலான எல்லாச் சிறப்புக்களும் கிட்டுமாறும் கட்டுரைச்சொற்களால் தெள்ளிதில் அவை எஞ்ஞான்றும் நெஞ்சில் பதிந்து நிற்குமாறும், காட்டியுள்ள கல்வித்திறத்தின் அளவை ஆழ்வார்யாரே? அவரைப்போல பெருமைபெற்று கல்விப்புலமை வாய்ந்த மகளிர் பிறசொல்லாளர்களில் கிடையா.

8. மேற்சொன்னவைக் கிணங்க, இன்னிசை வாய்ந்த பல பாட்டுகளும்; தேவாரம், திரு வாசகம், தாயுமானவர் பாடல், திருவாய்மொழி முதலிய எண்ணிறந்த பண்ணமைந்த செய்யுள்களும், பாடுவோரேயன்றி கேட்போரையும் இன்னிசையால் தம் வசப்படுத்தி அத்தருவாயில் மட்டும் இன்பந்தருவதன்றி, அவ்வின்னிசையை நாடிப்பற்றிப் பழகுவோர்க்கு, தம்மிடத்துள்ள உட்கருத்தாகிய நுண்ணிய நூற்பயனையும் ஊட்டி உயிர்க்குஉறுதி செய்விக்கின்றன. அறியாமையால் மயங்கிக்கிடந்து தாமாக நல்வழிப்பட மாட்டாதவரை நல்வழிப்படுத்துவதற்காக, கைப்பான மருந்தை இனிப்பான வெல்லத்துள் இட்டுத்தருவதனால் நோய் தீர்க்கும் பான்மையேபோல், எல்லாரு முய்யுமாறு, இன்னி

சைப்பாக்களின் வாயிலாகவே மூதறிஞராகிய அடியார்கள் எவர்க்குமரிதான மெய்ப்பொருளின் உட்கருத்துகளை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். இதனைக்கொண்டேதான், அந்நூற்பயன்களை யுணர்த்தி உயிர்க்கு உதவிசெய்விக்குமாறு கருதப்பட்ட சிற்சில இயற்றமிழ் நூல்களும், அணிமுதலான இனிமைவாய்க்கப்பெற்ற தண்டமிழில் எழுதப்பட்டுள. இஃதிவ்வாறாக, குறளைப்பற்றி மட்டும் சற்று நோக்குவோம். இதிலுள்ள செய்யுள் ஒவ்வொன்றும் மிகச்சிறிதாயினும், "அணுவைத் துளைத்தேழு கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்" என ஒளவையாரால் புகழப்பெற்றதுபோல், அறம், பொருள் இன்பமாகிய முப்பால்களை அதன்வாயிலாக, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் விரித்துக் காட்டி மக்களை நல்லொழுக்கில் நிறுத்துகிறது. குறளில், திருவள்ளுவநாயனர் "இல்லறமல்லது நல்லறமன்று" என்பதை, தாமாய் நேரிற்காட்டியதன்றி, விளக்கிக்காட்டி யிருப்பதுபோல் எந்நூலிலும் எச்சொல்லிலுமில்லை. மேலும் பற்பலசெய்யுள்கள் இயற்பொருளன்றி பல்வேறுபான்மையுள்ள செம்பொருள்களும் சரியாய்ப் பொருந்தப் பெற்றிருப்பதனல், வேறுபல நுண்பொருள்களும் வரப்பெற்று அறியாத மூடர்களும் உணர்ச்சிபெறுகிறார்கள், முந்தை நாளில்மற்றப்புலவர்களுக்கும் இடந்தராமல் 'சங்கப்பலகை' இந்நூலுக்குமட்டும் இடந்ததாலும், மறையின்பயன் முழுதும் உணர்த்துவதாலும் இதுதமிழ்மறை எனக்கொள்ளப் படுகிறது. மற்றை நூல்களையும்பற்றிச் சொல்லின் பெருகும். சுருங்கச்சொல்லின், இவ்வருமைகள் தமிழுக்கே உரியன.

9. தமிழ் தனியாக உண்டாக்கப்பட்ட முதற்பொருளேயன்றி பிறசொற்களினின்றும் பிறந்ததன்று என்பதும் அது தொன்மையானதென்பதும் முன்னே கூறப்பட்டுள்ளன. அன்றியும், அது எவ்வகையிலும் நிறைவுடையது. சிலர், பிறசொற்களைத் தமிழில் சொல்லுங்கால் சிற்சில எழுத்துக்குறைகள் தோன்றுவதால், அது அச்சொல்லுக்குக்குறையெனல் முற்றும் தவறு.

(வரும்)

ஸ்வாமி விவேகாநந்தரின் எதிரொலிகள்.

[ஸ்ரீமாந்-எம்-ஸி-நஞ்சுண்டராவ் அவர்கள் எழுதியது]

(முன்தொடர்ச்சி).

ஸிவாஜி துணிகரமாகச் செய்யும் கார்யங்களி லெல்லாம் ஜெயமே பெற்றுவருவதை அவனுடைய, ஸ்நேகிதர்களாகிய வாலிபர்கள் கவனித்து அவனை பவானி தேவியின் பிரத்தியேக கடாட்சம்பெற்றுள்ளவன் என்று பலமாக நம்பியிருந்தார்கள். இவர்கள் ஆயுதமும் பயிற்சியும் இல்லாதவர்களாயினும் ஸிவாஜியினுடன் சேர்ந்துகொண்டு மகம்மதியர்களுடைய மலைக்கோட்டைகளிலும் கொத்தளங்களிலும் எவரும் அறியாமல் தொத்தித்தொத்தி ஏறி உள்ளிருக்கும் காவற்படைகளின்மீது திடீரென்று பாய்ந்து அவர்களைக் கொன்று சின்னாபின்னப்படுத்தி ஆயுதங்களையும் தனதான்னியங்களையும் கொள்ளையடித்துக்கொண்டு தப்பித்து ஓடிவிடுவார்கள். இவ்விதமாக ஸிவாஜியும் அவனுடைய தோழர்களும் வயது ஆகஆக தைரியத்திலும் உற்சாகத்திலும் மிகுந்துவந்தார்கள். ஸிவாஜியின் தோழர்கள் ஸிவாஜி சொல்வதை வேதவாக்காகக்கொண்டு சற்றும் தவறாமல் சந்தோஷத்துடன் கீழ்ப்படிந்து நடப்பார்கள். யுத்தகளத்தில் ஸிவாஜியினால் ஜெயிக்கப்பட்டவர்களும் அவனுடைய கொடிய விரோதிகளும் கூட அவனுக்கு அடங்கி அன்புபூண்டு ஒழுகும்படி அவர்களை யெல்லாம் ஆகருஷிக்கத்தக்க முகவசீகரத்தை யுடையவனா யிருந்தான் ஸிவாஜி. மகம்மதியர்களிற் கூடச் சிலர் அவன்வயப்பட்டு அவனுக்கு ஆப்தநண்பர்களாயிருந்தார்கள். ஸிவாஜி தன்னிடத்தில் இயல்பாகவேயுள்ள ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தன்னைச்சேர்ந்த வர்களுக்கும் இடைவிடாது ஊட்டிவந்தான். ஸிவாஜி ஒரு ராஜாங்க ஸ்தாபகனாவதற்கு அவனுக்கு புத்தியுக்திகளாலும் சரீரபலத்தாலும் உதவிசெய்தவர்கள் எல்லோரும் தாங்கள் செய்வதெல்லாம் தங்கள் கடமையென்று கருதிச் செய்துவந்தார்கள். ஸிவாஜியின் நண்பர்களில் எவரும் அபாயகாலங்களில் பின்வாங்கினதில்லை; எஜமானத்துரோகம் செய்ததில்லை; சத்துருவுடன் சேர்ந்துகொண்டதில்லை. ஆனால் அவர்களிற் பலரும் தங்களுடைய எஜமானன் தங்களுக்கு இட்ட ஊழியத்தைத் தாங்கள் உள்ளன்புடன் சரிவரச் செய்ததாக உள்ள சந்தோஷ நினைப்புடன் யுத்த

களத்தில் உயிர் துறந்து ஶிவாஜிக்கு ஜயத்தை யளித்திருக்கின்றனர்.

ஶிவாஜி மதவிஷயத்தில் மிகப்பற்றுள்ளவனு யிருந்ததினுலும் அவனுடையமனமானது ஸ்வபாவீகமாக பெரியோரிடத்தும் ஈஸ்வரனிடத்துமுள்ள நம்பிக்கையினு லாக்கப்பெற் றிருந்ததினுலுமே இவனுடைய செய்கைகள் சாத்தியமாயின. ஶிவாஜி தான் தனது தேசத்திற்காகவும் தனது ஜனங்களுக்காகவும் பாடுபடுவதற்கே தனது ஜீவிதகாலத்தைச் செலவழிக்க வேண்டுமென்றும் இதற்காகவே தான் பிறந்திருப்பதாகவும் நினைத்துக் கொண்டான். இவ்வுணர்ச்சியானது மதாபிமானத்தினின்றுமே உண்டாகின்றதாதலால், ஶிவாஜி மதப்பற்று மிகுந்தவன் என்பதில் சந்தேகமென்ன?

ஶிவாஜி எழுதப்படிக்கத் தெரிந்தவனன்று. அவன் எழுதுவதையும் படிப்பதையும் மிகவும் இகழ்ந்தான். ஆனல் ராமாயணம், மகாபாரதம்போன்ற பழய இதிகாசங்களைக் கேட்பதிலும் அவ்விதிகாசங்களில் கூறப்பட்டுள்ள வீரபுருஷர்களின் செய்கைகளைப்போலப் பராக்கிரமச் செய்கைகளைச் செய்வதிலும் பிரீதியதிகம். குழந்தைப்பருவம் முதலே கதாகாலக்ஷேபங்களைக் கேட்பதில் அவனுக்கு அவாமிகுதியுண்டு. வயது வந்தவுடனும் எங்காவது கதாகாலக்ஷேபம் நடக்கின்றது என்ருல் அவ்விடம் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் சரியே, அங்கு செல்வதால் என்ன அபாயம் நேரிட்டாலும் சரியே, போகாமலிருக்கமாட்டான். ஈஸ்வரவெறிகொண்ட, உத்த ஆத்மஞானதீரர்களால் கதைகள் செப்பப்படுகின்றனவென்ருல் அவற்றைக்கேட்பதற்கு அவன் எத்தனையோ மைல்தூரம் கால்நடையாக நடந்து சென்றதுண்டு. சில சமயங்களில் பகிரங்கமாயும் அடிக்கடியும் இந்த பால்யமன்னன் குடியானவனைப்போலும் யுத்த வீரனைப்போலும் உடைதரித்துக் கொண்டு சில முக்கிய தோழர்களுடன் திடீரென்றுவந்து தோன்றி விடுவான். அவன் எப்படி எப்பொழுது வந்தானென்றும் சென்ருனென்றும் எவருக்கும் தெரியாது. பிற்காலங்களில் இக்கதா காலக்ஷேபங்கள்தாம் இவன் தன்னுடைய ஜனங்களைப் பிறருக்குச் சந்தேகத்திற் கிடங்கொடுக்காமல் ஒன்று சேர்ப்பதற்கு உபாயங்களா யிருந்தன; இவன் கதாகாலக்ஷேபங்களுக்குச் செல்

கிறுனென்றால், ஏதோ துணிகரமான செய்கை செய்வதற்காகத் தான் என்று இவனுடைய நண்பர்கள் அறிந்து கொள்வார்கள்.

கடவுள்வெறிகொண்ட புருஷர்கள் செய்யும் கதைகளைக் கேட்பதற்கு இவனுக்கிருந்த பேராவலினால் இவன் ஒரு சமயம் தனக்கு அபாயம் நேரிடக்கூடிய ஸ்திதியில் எப்படி யகப்பட்டுக் கொண்டானென்றும் அவன்தப்பித்துக்கொண்ட ஆச்சரியமான விதத்தைப்பற்றியும் சொல்லவிரும்புகிறேன்.

சத்தாரா நகரிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய ஊரில் துக்காராம் ஸ்வாமிகள் வந்திருப்பதாயும், அங்கு ஒரு பிரபுவின் வீட்டில் கதைசெய்யப்போவதாகவும் ஶிவாஜி கேள்விப்பட்டு அன்றுமாலையில் அந்தக் கதையைக் கேட்பதற்கு எப்படியாவது அங்கு செல்லவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, சாதாரணக் குடியானவனைப்போல உடைத்தரித்துக் கால்நடையாக அவ்வூருக்குச் சென்றான். ஶிவாஜியினுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்கிக்கொண்டிருந்த மகம்மதியர்கள் எப்படியாவது இவனைப்பிடித்துக் கொன்றுவிட வேண்டுமென்று சூழ்ச்சிகள்செய்துகொண்டிருந்தார்கள். துக்காராம்ஸ்வாமிகள் கதைசெய்துகொண்டிருந்த வீட்டிற்குள் ஶிவாஜி ஒருவரும் அறியாமல் உள்ளே சென்றபோதிலும், எவனோ ஒருமகம்மதியன் ஶிவாஜியை கண்டுகொண்டு விட்டான். அவன் உடனே ஓடிச் சென்று மகம்மதியச் சைநியாதிபதியிடத்தில்கூற, அவன் உடனே சிலகுதிரைவீரர்களை அந்த வீட்டைவளைந்து ஶிவாஜியைப்பிடித்துக்கொண்டு வரும்படி யனுப்பினான். அன்றிரவு நிலவுபட்டப்பகல்போலக் காய்ந்துகொண்டிருந்தது. அர்த்தராத்திரியாய் விட்டது; ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகள் உள்ளக்கனிவினால் ஆநந்த கீர்த்தனம்செய்துகொண்டே அன்பாகிற அமிருதத்தைப் பங்கிட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்; ஜனங்கள் எல்லோரும் அதை ஆவலுடன் பருகிப்பருகி மெய்மறந்து பிரபஞ்சப் பிரக்ஞையற்று சித்திரப்பதுமைகள்போல ஸ்வாமிகளுடைய வாக்கில் லயித்திருந்தார்கள். இந்த ஜனக்கூட்டத்தில் ஶிவாஜியும் ஒரு குடியானவனைப்போல உட்கார்ந்திருந்தான். ஆனால் சூட்சுமதிருஷ்டியுள்ள துக்காராம் ஸ்வாமிகள் இவனை இன்னானென்று கண்டுகொண்டு விட்டார். ஶிவாஜியோ, ஏகவஸ்துவினிடத்தில் இன்புறக்கலந்து

இரண்டற்று நிற்கும் பிரஹ்மநிஷ்டர்களைப்போல, ஸ்வாமிகளிடத்தில் லயித்திருந்தான். இவ்வாநந்த காலக்ஷேபத்தின் மத்தியில் ஸ்வாமிகள் திடீரென்று இரண்டொரு நிஷம்வரையில் யாதொன்றும் பேசாமல், கண்கள் மேனோக்க தீர்க்கதியானத்தில் இருப்பவர்போல அசைவற்று நின்றுவிட்டுப் பிறகு முன்போலகதையைத் தொடங்கினர். சிலநிமிஷங்களுக்குப்பின்னர் ஷிவாஜியைப்போன்றதோர் உருவம் குடியானவனுடைய உடையுடன் அவ்விடத்திலிருந்தும் வெளியேசெல்வதுபோலத் தோன்றிற்று; ஆனால் அதை ஜனங்கள் ஒருவரும் கவனிக்கவில்லை. ஸ்வாமிகள் மாத்திரம் அவ்வுருவம் வெளியே சென்றதையும் அவ்வீட்டைச்சூழ்ந்து நின்றகுதிரைவீரர்கள் அதைத்தொடர்ந்து சென்றதையும் கவனித்தார். ஸ்வாமிகள் கதையைமுடிக்கும்பொழுது அநேகமாய் சமயமாய்விட்டது; பின்னர் ஸ்வாமிகள் ஷிவாஜியைத் தனிமையில் அழைத்து அவனுக்கு எவ்வித ஆபத்து நேரிடவிருந்ததென்றும் அவனுக்கு ஈஸ்வரனிடத்துள்ள அளவற்ற பக்தியினால் ஈஸ்வரன் அவனை எவ்விதமாக அவ்வாபத்தினின்றும் ரட்சித்தாரென்றும் கூறி அவனை ஆசீர்வதித்து அனுப்பினதாகச் சொல்லப்படுகிறது. குதிரை வீரர்கள் பின்தொடர்ந்து சென்ற உருவமானது ஒரு காட்டிற்குள் சென்று மறைந்து விட்டதென்றும் அவர்கள் அக்காட்டினின்றும் வெளியேவருவதற்கு வழி தெரியாமல் மறுநாட்காலைவரையில் திண்டாடினர்களென்றும் இதற்குள்ளாக ஷிவாஜி சத்தாரா நகரில் தனது வீடுபோய்ச் சேர்ந்தானென்றும் சொல்லப்படுகிறது.

(வரும்).

நவத்வீப நகரகலாசாலை.

(முன்தொடர்ச்சி.)

ரகுநாத சிரோமணி

கி-பி-1477-கி-பி-1547.

ரகுநாதர் நவத்வீப நகரத்தில் கி-பி-1477-வது வருஷத்தில் பிறந்தவர். இவருக்கு வயது ஒன்று ஆகும்பொழுது இவருடைய பிதா மரித்துவிட்டார். இவருடைய தாயார் இவரை வெகு சிரமப்

பட்டுக் காப்பாற்றி வளர்த்துவந்தாள். இவர் ஐந்து வயதுப் பையனு யிருக்கும்பொழுது இவருடைய தாயார் இவரைக்கலா சாலையிலிருந்து கொஞ்சம் நெருப்பு எடுத்துக்கொண்டு வரும்படி அனுப்பினுள். இவர் நெருப்பு எடுத்துவருவதற்குக் கையில் பாத்திரம் ஒன்றும் எடுத்துப்போகவில்லை. அக்கலாசாலை மாணவன் ஒருவன் கொழுந்துவிட்டு எரியும் தணலை யெடுத்துக்கொடுத்தான். இவர் உடனே சிறிதும் பின்வாங்காமல் பூமியிலிருந்து கொஞ்சம் மணலையெடுத்து அம்மணலின்மேல் நெருப்பை வைக்கும்படி சொல்லி அதை யெடுத்துக்கொண்டு வந்தார். இதை வாசுதேவ சார்வபௌமர் பார்த்துக்கொண்டிருந்தார். குழந்தைப்பருவத்திலேயே இவருக்கு இருந்த யுக்தியையும் மனுேதைரியத்தையும்பற்றி அவர் ஆச்சர்யப்பட்டு சந்தோஷம் மிகுந்து அன்று முதல் இவரைப்படிப்பிப்பதற்கும்போஷிப்பதற்கும் தாம் ஏற்றுக்கொண்டார். இவர் அட்சராப்பியாசம் செய்யும் பொழுதே அட்சரங்களின் இயல்பைப்பற்றியும் ஆரம்பத்தைப் பற்றியும் கேள்விகேட்க ஆரம்பித்து விட்டார். பின்னர் உயர்தர வகுப்புப்பாடங்களைக்கற்க ஆரம்பித்து இலக்கணம், இலக்கியம், தர்மசாஸ்திரம் இவற்றை நன்ருக ஆராய்ந்து கொண்டார். பிறகு வாசுதேவபௌமரிடத்திலே தர்க்கசாஸ்திரம்பயில ஆரம்பித்து அநேக குழப்பமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர். சிலசமயங்களில் இவர் தனியே ஆலமரங்களின் அடியில் போய் உட்கார்ந்துகொண்டு தமக்கு மனத்தில் தெளியாததர்க்க விஷயங்களைப்பற்றிச் சிந்தனை செய்வதில் ஆழ்ந்துவிடுவார். இவர் வெகு சீக்கிரத்தில் குருவுக்கு மிஞ்சின சிஷ்யராகி விட்டார்; குரு எழுதிய தர்க்கசாஸ்திர வியாக்கியானம் உபயோகமற்றது என்று நிரூபித்தார். நவத்வீப நகரக்கலாசாலை மாணவர்களைப் பரீட்சைசெய்து யோக்கியதாபட்டங்கள் கொடுப்பதற்கு அதிகாரமுள்ளது என்று ஒரு சாசனம் வாங்கும்பொருட்டு, இவர் ஒருமாணவனுக வேஷந்தரித்து மிதிலைக்குச் சென்று பண்டிதர் பக்ஷாதரமிஸ்ரருடைய கலாசாலையில் சேர்ந்துகொண்டார். ரகுநாதருக்கு ஒற்றைக்கண் பொட்டை. ஆதலால் அக்கலாசாலைமாணவர்கள் இவரை "இந்திரனுக்கு ஆயிரம் கண்கள்; சிவனுக்கு மூன்றுகண்கள்; மற்றவர்களுக்கெல்லாம் இரண்டுகண்கள்; இப்படியிருக்க ஒற்றைக்கண்ணனுகிய நீ யாரடா" என்று கூறிப் பரிகசித்தார்கள்.

• ரகுநாதர் அக்கலாசாலையில் சேர்ந்து வெகு சீக்கிரத்தில் எல்லோராலும் மெச்சப்பெற்று உயர்ந்த வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவர் கேட்கும் கேள்விகள் சில சமயங்களில் உபாத்தியாயரை விழிக்கச்செய்துவிடும். குருவும் சிஷ்யனுமாக ஆத்திரத்துடன் அநேகசமயங்களில்தர்க்கம் செய்தார்கள். ஒருநாள்பக்ஷாதரமிஸ்ரர் உபாத்தியாயருடைய லட்சணமாகிய சாந்தத்தையும், பொறுமையையும் இழந்து, ரகுநாதரைமிகவும் இகழ்ந்துகூறினார். ரகுநாதர் தன்மதிப்பு மிகுந்தவர். பக்ஷாதரர் சொன்னவார்த்தைகள் ரகுநாதருடைய மனத்தைத் துடிக்கச் செய்து விட்டன. அன்றுமுதல் பக்ஷாதரர் குருவன்று என்றும் எதிரியே யென்றும் ரகுநாதர் தீர்மானித்துக்கொண்டார். அன்றிரவே ரகுநாதர் கத்தியும்கையுமாய் பக்ஷாதரருடைய வீட்டிற்குள் நுழைந்து ஒளிந்துகொண்டார். அர்த்தராத்திரியாயிற்று. இதுதான் சமயமென்று ரகுநாதர் பக்ஷாதரர் படுத்திருந்த இடம் நோக்கிச்சென்றார். அங்கே பக்ஷாதரரும் அவருடைய மனைவியுமாக சயனித்துக்கொண்டிருந்தார்கள். பார்த்தார் ரகுநாதர், அவருக்கு மனம் துணியவில்லை. வசந்தகாலம்; பட்டப்பகல்போல நிலவுகாய்கின்றது. சத்துவகுணசம்பன்னர்களுடைய ஹிருதயம்போல், ஆகாயம் தெளிவாயிருக்கின்றது. சிருஷ்டியெல்லாம் அடங்கி ஆநந்தம் மிகுந்திருக்கின்றது. இந்த இரண்டுபண்டிதர்களும் தாம்விசாரத்தில் ஆழ்ந்திருந்தார்கள்:—ஒருவருக்குத்தமது கீர்த்தி அழிந்துவிடப்போகின்றதேயென்ற விசாரம், மற்றவருக்குத் தாம் இகழப்பட்டமைபற்றி விசாரம்; கொல்லும் எண்ணத்துடன் புறப்பட்டிருக்கும் பால்யபண்டிதர் சிறிது நேரம் கலங்கிநின்றார் உடனே மனத்தைத்திடப்படுத்திக்கொண்டு புருஷனும் மனைவியும் படுத்திருந்த இடம்நோக்கி வேகமாகச் சென்றார். ஆயினும் இவர் என்ன? கொலைக்குணமுடையவரா? சட்டென்று நின்றுவிட்டார். புருஷனும் மனைவியும் என்னபேசிக் கொள்கிறார்களென்றுகவனித்தார். அப்பொழுது மனைவிபுருஷனைநோக்கி "பிரபுவே, இரவுக்கு ராஜாவாயுள்ள இந்த சந்திரனைப்பார்க்கிலும் பிரகாசமானது ஏதேனும் ஒன்று உண்டோ?" என்று கேட்டலும், பக்ஷாதரர் "என் கண்ணே, சந்திரனைப்பார்க்கிலும் பிரகாசமானது ஒன்று இருக்கின்றது. இன்று மாலையெல்லாம் நான் அதைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். வங்காளத்திலிருந்து ஒரு தர்க்கசாஸ்திரி வந்திருக்கிறார். அவர்நமக்குப் பெருங்குழப்பங்களை

யுண்டாக்கிவிட்டுவிட்டார். என்னுடைய அபிப்பிராயத்தில் அவருடையபுத்தி பூரணசந்திரனிலும் பிரகாசம் மிகுந்ததே. அவர் இன்றுகாலையில் என்னுடன் வெகுபிடிவாதமாகத் தர்க்கம்செய்து என்னைத்தோற்கடித்துவிட்டார்" என்றார். இந்தச்சம்பாஷணையை ஒளிந்திருந்துகேட்டார் ரகுநாதர்; அவருடையகையினின்றும் கத்தியானது நழுவிக் கீழேவிழுந்துவிட்டது; சரேலென்று ஓடிப் பக்ஷதாருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார். பக்ஷதார் அவரைமன்னித்து மறுநாட்காலையில் கலாசாலையினர் அனைவரும் கூடியிருக்க அவர்களின் முன்பாக, வங்காளத்து வாலிபசாஸ்திரியிடத்தில்தாம் தோற்றுவிட்டதாகத்தாமே ஒப்புக்கொண்டார். இதுவே ரகுநாதர்யோக்கியதாபட்டம் கொடுக்கத் தகுந்தவர் என்பதற்குச் சான்றாயிற்று. கி. பி. 1503-வது வருஷத்தில் இந்த ஜயம் இவருக்குக்கிடைத்தது. இவ்வருஷத்திலிருந்து தான் நவத்வீப நகரக் கலாசாலை ஸ்தாபகமாயிற்று ரகுநாதர் தமது 70-வது வயதில் கி. பி. 1547-வது வருஷத்தில் இப்பூவுலகு துறந்தார்.

மகாமகோபாத்யாய-ராமநாதசாஸ்திரிகள்.

நமது பலசரக்குக் கடை.

(''விச்வா மித்ரர்'' எழுதுகிறார்.)

இவ்வளவு தானா?

நாம், ஸாதாரணமாக, ஒருவ்பாசத்தையோ அல்லது ஒரு புஸ்தகத்தையோ வாசித்து மகிழ்வதற்குமுன் அதன் ஆசிரியன் எப்படிப்பட்டவன் என்பதையறிய முயல்கின்றோம். "நமதுபலசரக்குக்கடை" யென்று "ஞானபாநு'வில் இனி மாதந்தோறும் தவறாமல் வ்யாஸங்கள் ப்ரசுரம் செய்யப்படும். அந்தக்கடையை நான்திறந்து வ்யாபாரம் செய்ய உத்தேசித்திருக்கிறேனானதால் என்னைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் இங்கே சொல்கிறேன். நான் ஒரு நாடோடி. ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தையும், ஜனங்களின் ஸ்வபாவத்தையும் உற்றுநோக்கி என் இயற்கையறிவை விசாலப்படுத்திக் கொள்ளுதலே என்னுடைய தொழில். நான் உண்மையான ஆஸ்திகன்; ஆனால் "என்மதமே சிறந்தது" என்று வீண்சண்டையிடும் துர்க்குணம் என்னிடமில்லை. உலகத்து ஜனங்களிடமிருந்து ஸத்விஷயங்களை த்வேஷ புத்தியில்லாமல்

க்ரஹிப்பேன். பிறதேசத்தினருடன் நான் கலந்துபழகியதால் விசேஷவிஷயங்கள் சிலகற்றிருக்கிறேன். இதுவரையில் நான், முயற்சியினாலும், அநுமானத்தினாலும், படிப்பினாலும் ஸம்பாதித்த ஸாமான்களைக்கொண்டு, கொஞ்சம் தைர்யத்துடன் என் கடையைத்திறந்துவிட்டேன். வ்யாபாரம் நடக்கும்பொழுது நான்சிலவிஷயங்களை ஹாஸ்யமாகவும், சிலவற்றை ஸாதாரணமாகவும், சிலவற்றை கண்டிப்பாகவும் விலை கூறவேண்டியிருக்கும்: ஆகையால் வாசகர்களே! உங்களுடைய அபிப்ராயத்துக்கும் என்னுடைய மதிப்புக்கும் பேதம் ஏற்பட்டால் "இவன் இவ்வளவுதானா?" என்றிருங்கள்.

* * * *

தமிழரின் தன்மதிப்பு.

நமக்கு நம் அருமைத்தமிழின் மீதும் தமிழ் நூல்கள் மீதும் மதிப்புச்சிறிதும் கிடையாது என்பதைக் கூற எனக்கே வெட்கமாயிருக்கிறது. ஏனெனில் நானும் அந்தக்கக்ஷியைச் சேர்ந்தவன். என்நண்பன் ஒருவன் சென்னையில் பெரிய வகுப்பில் சிலவருஷங்கட்குமுன்னர் என்னுடன் வாசித்துவந்தான். நான் எப்பொழுதாவது திருக்குறளையும் தேவாரத்தையும் வாசித்தால், அவன் என்னைப்பார்த்து, "இது என்னடா! நாட்டுப்புறம்! தமிழைக் கட்டிக்கொண்டு ஏன் அழுகிறாய்? அதைப்படித்துத்தானா பரீக்ஷையில் தேறப்போகிறாய்?" என்று ஹேளனமாகப் பலவார்த்தைகளைச் சொன்னான். நான் அவனுக்குத் திருக்குறளின் ப்ரபாவத்தைப் பன்முறை சொல்லியும் அவன் கவனிக்கவே யில்லை. ஒருவருஷம் கழிந்த பின்னர் ஒரு ஆங்கிலப் பத்ரிகையில் திருவள்ளுவரைப்பற்றி எழுதிய வ்யாஸத்தில் ஜி. யூ. போப் என்பவரின் மதிப்புரைகள் மேற்கோளாகக் காட்டப்பட்டிருந்தன. அதனைக் கண்டதும் எனது மித்திரன் உடனே ஒரு திருக்குறளை வாங்கி வாசிக்கலானான். நான் அவனைப்பார்த்து "நான் சொன்னது உன்காதில் ஏறவில்லையோ" என்றேன். அவன் "இங்கிலீஷ்காரனாகிய போப்துரையே குறளைப்பற்றிச் சிலாகித்துச் சொல்லியிருக்கும்பொழுது நான் அதை வாசிக்கவேண்டியது அவச்யம்" என்றான். என்னே! இவனது பெருந்தன்மை! நமது புஸ்தகத்தைப்பற்றி வெளிநாட்டான் சொன்னபின் தான் வாசிக்கவேண்டுமாம்! இங்கிலீஷ்காரன் சொன்னால் அது தேவவாக்கு! ஆனால்

நான் இங்கிலீஷ்காரனைத் தாழ்வாக நினைக்கவில்லை. ஆனால் நமது விஷயங்களை நாமே யறியவேண்டும். நம் சாமான்களை நாம் நன்குமதிக்க வேண்டும். நமது புஸ்தகங்களை அதிகமாகப் பரவச் செய்யவேண்டும். தமிழில் பேசினால் இழிவு என்று பலர் நினைக்கின்றனர். இதுவா நாம் நம் தமிழிற்குச் செய்யவேண்டிய கடமை! நம்பழைய தமிழ்நூல்கள் அதிகமாகச் செலவாக வேண்டும். என் கடையில் தமிழ் ஸரியானபடி செலாவணியாவதில்லை தமிழணங்கே? நீதான் ஸஹாயம் செய்யவேண்டும்!

* • • *

ஜாதிபேதம் கூடாதாம்!

நாம் இப்பொழுது பத்திரிகை யுலகத்தில் இருக்கிறோம். படிக்கத் தெரிந்தவரில் ஏறக்குறைய எல்லோரும் பத்ரிகைகளை வாசிக்கிறார்கள். அந்தப் பத்ரிகைகளில் அடிக்கடி சில விஷயங்கள் வாசிப்பவரின் எண்ணங்களைச் சிதறடிக்கும்படிச் செய்துவிடுகின்றன. இந்தியா க்ஷேமப்பட்டுத் தன்னைத்தானே ரக்ஷித்துக் கொள்ளும் சக்தி அதற்கு வரவேண்டுமானால், ஜாதிபேதம் ஒழிந்துவிடவேணும்; மதபேதம் ஒழிந்துவிடவேண்டும்; என்று சரமாரியான வ்யாஸங்கள் பத்ரிகைகளில் வருகின்றன. இது ஒரு சோம்பேறிப்பேச்சு. அமெரிக்காவிலுள்ள ஐக்ய நாடுகளில் பலவிதமான ஜாதியார்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்குத் தேச உணர்ச்சியில்லையா? ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஸர்லாண்ட் தேசத்தில் பலஜாதி ஜனங்கள் பலவிதபாஷைகளைப் பேசினாலும் அவர்கள் தேசம் செழித்து க்ஷேமப்பட்டிருக்க வில்லையா? ஆகவே நம் இந்தியருக்குள் ஒருஜாதீய உணர்ச்சி ஊன்றி, செழித்து வளர்வதற்கு ஜாதிபேதமும் தடையில்லை; மதபேதமும் தடையில்லை; ஆனால் ஒவ்வொருவனும் தான் செய்யவேண்டிய தர்மத்தைச் செய்தால் தேசமுழுவதிலும் புது உணர்ச்சி ஒன்றுபரவிவிடும். எல்லா நற்குணங்களும், ஸகல கடமைகளும் தர்மத்தில் அடங்கும். தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன், உலகத்தில் நடைபெறும் எல்லா விஷயங்களும் கடவுளின் ஆக்ஞையென்று நம்புவான்; தேசத்துக்கும், பிறருக்கும் தான்கடமைப்பட்டவன் என்றுகருதி பரோபகாரியாயிருப்பான். ஆகவே, ஜாதிபேதம் போய்விட்டால் இந்தியா ஐக்யப்பட்டு விடும் என்ற நம்பிக்கை வீண். நம்முன்னோர்கள் அத்தனை மூடர்களல்லர். இப்போது ஜாதி

பேதம்போய்விட்டாலும், இங்கிலாந்திலிருப்பதைப்போல, பண பேதம் இந்தியாவில் நன்றாய்வேரூன்றிவிடும். ஜனங்கள் பேதமின்றி இருத்தல் ஒருகாலத்திலும் முடியாதகார்யமாம். ஆனால் எல்லாருக்கும் ஒரே உணர்ச்சியிருந்தால் நாம் ஒற்றுமைக்கலாம்.

* * * * * *

இதுபெருமையல்லவா?

ஒரு வேலையற்ற இங்கிலீஷ்கணக்காளி, ஒவ்வொருமனிதனும் தனது ஆயுள்காலத்தில் எவ்வளவுபேசுகின்றான் என்பதை வெகு ச்ரமப்பட்டுக்கண்டுபிடித்திருக்கிறார். குறைந்த பக்ஷம் நாள் ஒன்றுக்கு ஒவ்வொருமனிதனும் 5 மணிநேரம் ஸம்பாஷணைசெய்கின்றான். அவன் ஒருமணிக்கு "பாநு"வின்பக்கங்கள் திட்டத்தில் 15 பக்கங்களவ்வளவு பேசுகிறான்; அதாவது ஒரு வாரத்தில் 525 பக்கங்கள் கொள்ளும் விஷயங்களை ஸம்பாஷிக்கிறான். எழுபதுவருஷத்தில் அவன் பேசும் பேச்சுக்களை அச்சிட 3640 புஸ்தகங்கள்வேண்டியிருக்கின்றன. 3640 புஸ்தகங்கள் அடங்கிய ஒருபுஸ்தகவாசகசாலை மிகவும் நன்குமதிக்கத்தக்க தல்லவா? இபபுஸ்தகங்கள் யாவும் ஒருமனிதன் பேசும் பேச்சுத்தானே? இதுவும் ஒரு பெருமைதானே?

* * *

விசேஷவிஷயங்கள்.

சரித்ரக்காரர்களுக்குத் தெரிந்தமட்டில், பொதுப் புஸ்தகசாலை முதல்முதலில் க்ரீஸ்தேசத்துத் தலைநகரான ஆதென்ஸில் கி. மு. 540—ல் வைக்கப்பட்டதாம். இப்பொழுது லண்டனில் இருக்கும் பிரிட்டிஷ்காக்ஷிசாலையில் 11 லக்ஷம் புஸ்தகங்களிருக்கின்றனவாம். பாரீஸிலுள்ள புஸ்தகசாலைதான் எல்லாவற்றினும் மேம்பட்டது. அதில் 14 லக்ஷம் புஸ்தகங்களும், 3லக்ஷம் துண்டுப் பத்திரிகைகளும், $1\frac{3}{4}$ லக்ஷம் கையெழுத்துப் பிரதிகளும், 3 லக்ஷம் பூகோளப் படங்களும் $1\frac{1}{2}$ லக்ஷம் நாணயங்களும் இருக்கின்றனவாம்.

* * *

தேசக்ஷேமத்தின் ரஹஸ்யம்.

ஒருதேசத்தை உயர்த்துவதும்; அதனைப்பலப்படுத்துவதும்; அதற்கு ஓர்மஹத்வம் உண்டாக்குவதும்; அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச்செல்வாக்கு உண்டாகப் பிறர் அதற்கு அடங்கி

அதை அபிமானிக்கும்படிச் செய்வதும்; லக்ஷாதிலக்ஷம் பேருடைய ஹ்ருதயங்களை வணக்கி அதற்குமுன் இதரதேசத்தார்கள் கர்வம் அடங்கி தலைவணங்கும்படிச் செய்வதும்; கீழ்ப்படியச் செய்வதற்கு ஏற்றகருவியும், மேன்மை பெறுதற்கு மூலாதாரமாயிருப்பதும்; ஒருதேசத்தார்க்கு மெய்யான ஸிம்ஹாஸனம், க்ரீடம், செங்கோல் ஆகியஇவைகளை விளைவிப்பதும் ஒருவருடைய குலப்பெருமையுமன்று; நாகரிகப்பெருமையுமன்று; புத்தி, விவேகங்களின் திறமைமாத்ரமுமன்று; ஆனால் நல்லொழுக்கமாகிற யோக்யதையின் பெருமையேயாம்; இதுவே மனிதருக்கு மெய்யான குலவித்தையாம்.

* * * * *

இதுதான்பேதம்.

எனக்கு ஒரு அந்தண நண்பர் இருக்கிறார். அவருக்குத் தேள்மருந்து ஒன்று தெரியும். நமதுவீட்டிலேயே ஒருவனுக்குத் தேள்கொட்டி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது அந்த நண்பர் எனது வீட்டின்புறக்கடையிற் சென்று ஏதோ சில பசுமையான இலைகளைக் கசக்கி அதன்சாற்றைத் தேள்கொட்டியவன் வாயில்விட்டார். உடனே இரண்டு நிமிஷத்துக்குள் அவனுக்கு ஒரு உபாதியுமில்லை இதனை உற்றுநோக்கிவந்த நான் எனது நண்பரை, அந்தப்பச்சிலையின் பெயரைக் கூறும்படி, அநேக தடவை வேண்டியும் அவர் சொல்லமாட்டேன் என்று மறுத்துவிட்டார். வெளியிற்சொன்னால் மருந்துபலிக்காதாம்! என்னே! இவரதுபரோபகாரம்! ஆங்கிலேயர்கள் தாம் எந்தப்புதுவிஷயங்களைக்கண்டுபிடித்தாலும் உடனே அவைகளைப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தி உலக ஜனங்களுக்குப் பலவிதத்திலும் நன்மைபுரிகிறார்கள். அவர்கள் கண்டுபிடித்த இருப்புப்பாதை வண்டி, நீராவிக்கப்பல், அச்சுத்தொழில் முதலியவைகள் நமக்குப்பயன்படவில்லையா? இதுவன்றோபரோபகாரகுணம்! நம்நாட்டில் பலருக்குப்பல அரிய விஷயங்கள்தெரியும்; ஆனால் அவர்கள், முற்றிலும் ஸ்வயநலப்ரியர்களாதலால், தங்களுக்குத் தெரிந்த ரஹஸ்யங்களை வெளியிடப் பின்னடைகிறார்கள். அவர்கள் தம்ஸ்வயநலத்தை மூடபக்தியால் மறைக்கிறார்கள். வெளியில் சொன்னால் பலிக்காதாம்! இவர்களுக்கு அம்மருந்து பலிக்கும்போது, உலகத்தார்க்கு எவ்விதத்தில் பலிக்காமற்போய்விடுமோ தெரியவில்லை. மேல்நாட்டார் முன்னேற்றமடைவதற்கும் நாம்நின்ற இடத்திலேயே நிற்ப

தற்கும் காரணம் இதுதான், நமக்கும் அவர்களுக்கும் இதுதான் பேதம்.

* * * *

பழமொழி

பழமொழி என்பது என்ன? பல நூடைய அநுபவமும், சிறந்த உண்மையும், ஒருவனுடைய புத்திசாதுர்யமும், பெரிய விஷயங்களைச் சுருங்கச்சொல்லலுமேயாம்.

* * * *

பணம் ஸம்பாதிக்க வழி!

"உலகம் திருடர்களின் குகை' என்று மிகவருத்தத்தோடு ஒரு ஆங்கிலப்புலவர் கூறுகிறார். உலகம் பலவிதம், அதில்யோக்யர்களும் இருக்கிறார்கள்; மோசக்காரர்களும் இருக்கிறார்கள். எனது நண்பர் ஒருவர் எனக்கு, உண்மையாக நடந்த ஒரு வ்ருத்தாந்தத்தைக்கூறினார். அதுபின்வருமாறு:—சிலவருஷங்களுக்கு முன்னர் ஓர்வர்த்தக சங்கத்தார் பத்ரிகைகளிலெல்லாம் "ஆறு அணாதபால் முத்திரைகள் அனுப்புவோர்களுக்கு மாஸம் 150 ரூபாய், ச்ரமப்படாமல் ஸம்பாதிக்கும்வழி தெரிவிக்கப்படும்" என்றுவிளம்பரப்படுத்தினார்கள். அதனைக்கண்ட எனது நண்பர் உடனே ஆறு அணாதபால் முத்திரை அனுப்பினாராம். அதற்கு அந்தச் சங்கத்தார் சிலநாட்கள் கழித்து "இதுதான்பணம் ஸம்பாதிக்க ஸுலபமானவழி" என்று அச்சடித்த கடிதத்தை அவருக்கு அனுப்பினார்களாம். எனது நண்பர் இந்தக்கதையைச் சொல்லிவிட்டுச் சங்கத்தாரைத் திட்ட ஆரம்பித்தார். நான் அவரைநோக்கி "அவர்களைத்திட்டாதீர்! ஸுலபமாக இன்றைக்கே கோடீச்வரனாகப்போகவேண்டுமென்ற பண ஆசையுடன் அவர்கள்வலையில் அகப்பட்ட உம்மையே கடிந்து கொள்ளும்" என்றேன்; ஆகையால் வாசகர்களே! பத்ரிகையில் வெளிவரும் எல்லாவிளம்பரங்களையும் நம்பிமோசம்போகாதீர்கள்.

* * * * *

இதுவும் ஓர்மரியாதையா?

தேசங்கள் தோறும் வழக்கங்கள்வேறு. ஹிந்துக்கள் ஒருவரை ஒருவர்ஸந்தித்தால் கைகளை ஒன்றுசேர்த்துக்கும்பிடு போடுவது வழக்கம். ஆஸ்ட்ரேலியாவின் ஸ்வதேசிகள ஸந்தித்தால் ஒருவர் காலை இன்னொருவர் நக்குவர். தெற்குப்பஸிபிக் த்வீபங்

களிலுள்ளவர் ஒருவர் மற்றொரு நண்பரைக்கண்டால் ஒருகுடம் ஜலத்தை அவர் தலையில் கொட்டுவாராம்.

இனும்! ## ரூபாபத்து. இனும்!!

உங்களால் தனித்தமிழ் எழுதமுடியுமா? முடியுமானால் முந்துங்கள். சமஸ்கிருதம் முதலிய அந்நியபாஷாச் சொற்களில் ஒன்றுங்கலவாது தனித்தமிழில் இப்பத்திரிகையில் எட்டுப்பக்கங்கட்குக்குறையாது வரும்படியாகத் தமிழ்ப்பாஷையின் சிறப்பைப் பற்றியாவது திருவள்ளுவநாயனாரின் சரித்திரத்தையாவது எழுதுவோருக்கு ரூபாபத்து இனும் கொடுக்கப்படும். முந்தியவிளம்பரத்தின்படி நமக்குவந்த வியாசங்களில் ஒன்றும் அந்நியபாஷாச் சொற்கள் கலவாததனித்தமிழில் எழுதப்படவில்லையாகையால், அதற்கென்று அப்பொழுது ஏற்படுத்தியிருந்த பரிசில் ரூபா ஐந்தை இப்பொழுது ரூபாபத்து ஆகமாற்றியிருக்கிறோம். சமஸ்கிருதச்சொல்லாகிய கஜம் திரிந்து கயம் என்றாயிருப்பதுபோன்ற திரிபுச்சொற்களையும் உபயோகப்படுத்தலாகாது. சுருக்கத்தில் எந்தப்பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித்தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப் படவேண்டும். வியாசங்கள் இம்மாதம் (மார்கழிமீ) 30-ந் தேதிக்குள் நமக்கு அனுப்பிக்கொடுக்கப்படவேண்டும். வெகுமதிக்குரித்தாகிய வியாசமானது "ஞானபாநு"வில் பிரசுரிக்கப்படும். வெகுமதி பெற்றோரின்பெயர் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும்.

காரியஸ்தர் "ஞானபாநு"
மைலாப்பூர், சென்னை.

சமாச்சாரக் குறிப்பு.

பேசுபவர்கட்கெல்லாம்பதில் கூறுவதற்கு நாம் இங்கு இல்லை. நமக்கு எப்பொழுதும்காரியத்தினிடத்திலேயேகண். "பாரதபுத்திரன்" என்னவேண்டுமோ சொல்லிக்கொண்டு போகட்டும். "சுதேசமித்திர"னுடைய நடை இப்பொழுது சீர்திருத்தமடைந்துவருவதைநோக்க நாம் சந்தோஷிக்கிறோம். அப்பத்திரிகையின் புதியபத்திராதிபர் நமது வார்த்தைகளை அன்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறாரென்று ஊகிக்கிறோம். ஆங்கிலச்சொற்கள் () இத்தகைய அடைப்புக்குறிகளுக்குள்ளும் அவற்றிற்குச் சரியான தமிழ்ச்சொற்கள் சாதாரணமாகவும் உபயோகிக்கப்படுகின்றன. இவ்விஷயத்தில் இன்னும் சிறிது சிரமம் எடுத்துக்கொள்ளுமாறு நாம் "சுதேசமித்திரன்" பத்திராதிபரை மிக மிக வேண்டிக்கொள்கிறோம்.